## கொழும்பு பல்கலைக்கழகம் - 2015

---

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.2 தொடர்புடைய தரப்பினருடன் ஏற்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை**

நிறுவனத்திற்குள் கம்பனியொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரமொன்று பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான அங்கீகாரமின்றி கம்பனிச் சட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டின் போது "கொழும்பு சையன்ஸ் என்ட் டெக்னொலஜி செல்" (Colombo Science & Technology Cell) என்ற பெயரில் பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கம்பனியின் பிரதான அலுவலகம் கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்திற்குரிய கட்டிடமொன்றில் ஸ்தாபிக்கப்பட்டு பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமாக காணப்பட்ட கணனி உபபாகங்களை உள்ளடக்கிய ஏனைய பௌதீக மற்றும் மனிதவளங்களைப் பயன்படுத்தியிருந்த போதும் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான ஆதனங்களின் பாவனை தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் வளங்களைப் பயன்படுத்தியதற்காக ரூபா 294,763 தொகையொன்று பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**2.2.3 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 611,787,370 கிரயமான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளின் பெறுமதி உரிய ஆண்டின் போது வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 177,723 கூட்டுப்பெறுமதியான பட்டக் கற்கைப் பீடத்தில் இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் வருமானத்திற்கு செலவு வைக்கப்படாது அந்த பீடத்தினால் பேணப்படுகின்ற பீட அபிவிருத்தி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 45 மாணவர் குழுக்களுக்குரிய பாடநெறிகள் 2014 ஆம் ஆண்டின்போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், வருமான மிகையான ரூபா 85,593,750 தொகை திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படாமல் ரூபா 31,353,952 தொகை பீடங்களின் அபிவிருத்தி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டு சேமிக்கப்பட்ட ரூபா 54,239,798 தொகை பிற்போட்ட வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கீழே காண்பிக்கப்படுகின்ற கணக்கு விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| இலங்கை மின்சார சபையில் வைப்பு | 1,301,500 | உரிய பற்றுச்சீட்டு அல்லது வேறு உறுதிப்படுத்தும் பதிவேடு |
| காணி | 35,296,230 | உரித்துறுதி |
| இடர் கடன் | 4,184,905 | பட்டோலை |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

விழா முற்பணம் வழங்கப்பட்ட திகதி முதல் 10 மாத காலத்தில் உரிய உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட வேண்டிய போதிலும் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்ட ரூபா 179,100 தொகையான முற்பண மீதி கணக்காண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படாதிருந்ததுடன் அறவிடப்படாமைக்கான காரணமாக அமைந்த விடயங்கள் மற்றும் நிலுவை முற்பணத்திற்கான காலப்பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பப்பட்டிருக்கவில்லை.

### 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக பொதுத் திறைசேரியின் உயர்கல்வி அமைச்சின் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முறையான அங்கீகாரமின்றி பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்ற பாடநெறி வருமானத்தில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 2,060,300 மற்றும் ரூபா 5,443,800 தொகைகள் நிறுவனத்தின் பதவிநிலைத்தர உத்தியோகத்தர்களுக்கு கௌரவப்படியாக (Honorarium Payments) செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழக கல்விப் பீடத்தில் நடாத்தப்படுகின்ற பீட சபைக் கூட்டம் மற்றும் கல்விப்பிரிவில் நடாத்தப்படுகின்ற கல்விப்பிரிவு கூட்டம் அல்லது கற்கைச் சபைக் கூட்டங்களுக்காக சமூகமளிக்கின்ற அங்கத்தவர்களுக்காக பங்குபற்றல் படியொன்றைச் செலுத்துவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது நிதி அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் மூலம் அங்கீகாரம் வழங்கப்படாதிருக்கும் போது பட்டக் கற்கைப் பிடத்தினால் 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,106,217 தொகையொன்று பீடங்களின் சபைகள் மற்றும் கற்கை சபை அங்கத்தவர்களுக்கு பங்குபற்றல் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக பொதுத் திறைசேரியிலிருந்து, உயர்கல்வி

அமைச்சிலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முறையான அங்கீகாரமின்றி பட்டக் கற்கைப் பீடத்தினால் நடாத்தப்படுகின்ற 13 பாடநெறிகளின் வருமானங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 738,750 தொகையொன்று பட்டக்கற்கைப் பீடத்தின் 06 ஊழியர்களுக்கு படியாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவனத்தினால் நிலையான வைப்பில் முதலீட்டிற்காகக் கிடைத்த வட்டி வருமானத்தில் ரூபா 25 மில்லியன் தொகை உரிய அங்கீகாரமின்றி மருத்துவ காப்புறுதி நலன்புரி நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனவிதிக் கோவை | |
| (i) XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | நிறுவனத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் சகலரினதும் வருகை மற்றும் வெளிச்செல்கை நேரங்கள் குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும், 703 கல்விசார் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் விடுமுறைகள் உறுதிப்படுத்தாமையின் காரணமாக ரூபா 1,232,701,445 சம்பளம் மற்றும் படிகளின் சரியான தன்மையை பரீட்சிக்க முடியாதிருந்தது. |
| (ii) IX ஆம் அத்தியாயத்தின் 2.2 ஆம் பிரிவு மற்றும் 1993 யூன் 21 ஆந் திகதிய 575 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினங்களில் கடமைகளை மேற்கொள்வதற்காக கொடுப்பனவு செய்யும் போது ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் நிலையான படியொன்று வழங்கப்பட்டமையின் காரணமாக ரூபா 298,743 தொகையான படிகள் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் XIII ஆம் அத்தியாயத்தின் 99(1) | பல்கலைக்கழகத்தினால் பேணப்பட வேண்டிய நிதியத்திற்கு மேலதிகமாக 84 வேறு நிதியங்கள் பேணப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது முறையான அங்கீகாரமின்றி ரூபா 201,997,336 கூட்டுப்பெறுமதியானது அந்த நிதியங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. |
| (இ) 2014 பெப்ரவரி 11 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | திரண்ட நிதியத்திலிருந்து வழங்கப்படுகின்ற நிதிஏற்பாட்டை ஆராய்ச்சி செலவினங்களுக்காக செலவிட கூடாத போதிலும் மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்குக் கிடைத்த நிதிஏற்பாடுகளில் ரூபா 3,824,931 தொகை |

ஆராய்ச்சி மானியமாக வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

நிதிப்பிரமாணம் 371

(i) முற்பணமொன்று வழங்குதல் பதவிநிலைத் தர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், பதவிநிலையற்ற 29 உத்தியேகத்தர்களுக்கு 128 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2,140,650 கூட்டுப்பெறுமதியான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாக முற்பணம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 15 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 2,707,277 கூட்டுப்பெறுமதியான முற்பணம் வழங்கப்பட்டு 34 நாட்கள் முதல் 279 நாட்கள் வரையிலான காலம் கடந்திருந்த போதிலும் அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) உரியவாறு எதிர்வு கூறிய செலவின மதிப்பீடொன்றின் அடிப்படையில் மாத்திரம் முற்பணம் வழங்குதல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறின்றி முற்பணம் வழங்கப்பட்டமையின் காரணமாக ரூபா 158,201 தொகையான செலவினங்களுக்காக 23 சந்தர்ப்பங்களின் போது ரூபா 460,625 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

(உ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை

ஒரு தடவையில் வழங்கக்கூடிய ஆகக்கூடிய முற்பணத்தின் பெறுமதி ரூபா 100,000 ஆன போதிலும், நிறுவனத்தினால் 17 சந்தர்ப்பங்களின் போது சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறி ரூபா 105,000 முதல் ரூபா 300,000 வரையிலான வீச்சில் முற்பணம் வழங்கப்பட்டது.

## 3. நிதிமீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 326,038,151 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 372,221,037 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 46,182,886 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. அரசாங்கத்தின் மானியம் ரூபா 467,055,692 இனால் அதிகரித்திருந்த போதிலும், சம்பளம் மற்றும் வேதனங்களின்

செலவினம் ரூபா 400,333,561 இனாலும் ஏனைய மேந்தலைச் செலவினங்கள் ரூபா 130,653,265 இனாலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட நிதி விளைவின் வீழ்ச்சி தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுத்தாராய்ந்து பார்க்கும் போது 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தின் மிகை 52 சதவீத குறைவைக் காண்பித்திருந்தும் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் மிகை தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் மீண்டும் 2015 ஆம் ஆண்டின் போது சிறியளவான குறைவைக் காண்பித்திருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் அது 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 2,302,710,443 ஆகவும் ரூபா 2,629,543,494 ஆகவும் இருந்தன. அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பங்களிப்பிலான அதிகரிப்பு 14 சதவீதமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சீடா சறெக் செயற்திட்டம் 2010 ஆம் ஆண்டின்போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்திற்குரிய உடன்படிக்கையின் 7 ஆவது பிரிவின் பிரகாரம் உடன்படிக்கை மற்றும் பணிகள் முடிவடைந்ததன் பின்னர் எஞ்சியிருக்குமாயின் சுவீடன் அரசிற்கு வழங்கப்பட வேண்டிய போதிலும், செயற்திட்டத்தின் மிகையான ரூபா 2,543,154 தொகை பல்கலைக்கழகத்தினால் தொடர்ந்தும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) பீடத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத கற்கைப் பணிப்பாளர் என்ற பெயரில் பதவியொன்று ஏற்படுத்தப்பட்டு மாதமொன்றிற்கு ரூபா 15,000 வீதம் மீளாய்வாண்டின் ரூபா 165,000 தொகையான படியொன்று வழங்கப்பட்டிருந்தது. இந்த படிகளைச் செலுத்துவதற்காக விரிவுரையாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள பணிகள் தொடர்பான எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற பட்டக் கற்கைப் பீடக் கட்டிடத்தின் மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிட்டு பீடத்தின் பதிவாளரினால் மாதமொன்றிற்கு ரூபா 35,000 வீதம் மீளாய்வாண்டின் போது ரூபா 210,000 படியொன்று வழங்கப்பட்டிருந்தது. பதிவாளர் நிர்மாண நடவடிக்கைகளை மேற்பார்வை செய்த விதம் மற்றும் மேற்பார்வையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படாதிருக்கும் போது மேற்கூறப்பட்ட கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) பல்கலைக்கழகத்தால் கணனி உள்ளீட்டு உதவியாளர் பதவியொன்றில் சேவையாற்றிய நபரொருவரினால் போலியான பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழ் தயாரித்தமையின் காரணமாக அவருக்கு எதிராக 1968 இன் 25 ஆம் இலக்க பகிரங்க பரீட்சைகள் அதிகாரச்சட்டம் மற்றும் தண்டணை விதிக் கோவையின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்குமாறு பரீட்சைகள் ஆணையாளரினால் பதிவாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்காது அவரை சேவையில் இருந்து நீக்கி பல்கலைக்கழக சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு உடன்படிக்கை மற்றும் பிணைமுறிகளை மீறிய 31 விரிவுரையாளர்களிடமிருந்து பல்கலைக்கழகத்திற்கு ரூபா 36,019,234 தொகை கிடைக்க வேண்டியிருந்ததுடன் இந்த மீதியில் 2010 ஆம் ஆண்டிற்கு முன்னர் உடன்படிக்கையை முறித்திருந்த 07 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 1,892,022 தொகை அறவிடவேண்டியிருந்தும், அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. மேலும் 2010 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் பல்கலைக்கழக சேமலாப நிதியத்தில் உடன்படிக்கை செய்யப்பட்ட பணம் அறவிடக்கூடியதாக நிபந்தனையொன்று உள்ளடக்கியிருந்த போதிலும், அந்த நிபந்தனைகள் உள்ளடங்கியுள்ள 02 உடன்படிக்கைகள் மீறப்பட்டு 03 வருடங்களுக்கு அதிகமான காலம் கடந்திருந்த போதிலும் அறவிட வேண்டிய ரூபா 3,561,741 தொகையை உரிய விரிவுரையாளர்களின் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க மானியக் கணக்கில் ஆரம்ப மீதி ரூபா 41,618,780 ஆகக் காணப்பட்ட போதும் ரூபா 28,404,075 தொகையினைச் செலவிடுவதற்காக மீளாய்வாண்டின்போது திறைசேரியிலிருந்து ரூபா 55,000,000 தொகை பெறப்பட்டிருந்தது. சரியான மதிப்பீடின்றி நடவடிக்கை எடுக்கப்பட்டமையின் காரணமாக அக் கணக்கில் ரூபா 68,214,705 மீதியொன்று குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) மூலதன செலவினத்தில் மாணவர் நிலையக் கல்விற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 25,000,000 மூலதன மானியம் பெறப்பட்டிருந்த போதிலும் ரூபா 209,750 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(இ) சுத்திகரிக்கும் உடன்படிக்கைக்கு இணங்க சுத்திகரிக்கும் நடவடிக்கைகளுக்கு பங்களிக்கின்ற ஊழியர் எண்ணிக்கை மற்றும் சேவையாற்றிய நாட்களின் எண்ணிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கு இணங்கியிருந்த விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு சுத்திகரிக்கும் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை கணிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் கொடுப்பனவு செய்யப்பட்டமையின் காரணமாக தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் ஒரு மாதத்திற்காக ஒவ்வொரு பீடங்களுக்கும் உரிய சுத்திகரிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்த வேண்டிய தொகைக்கும் செலுத்திய தொகைக்கும் இடையே ரூபா 1,124,240 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஆராய்ச்சி மானியங்களைப் பெறும் விரிவுரையாளர்கள் ஆராய்ச்சி முன்மொழிவுகளில் குறிப்பிட்டுள்ள திகதிகளில் தமது ஆராய்ச்சிகளை நிறைவுசெய்து இறுதி ஆராய்ச்சி அறிக்கையினை வழங்க வேண்டியிருந்த போதிலும், ரூபா 9,136,737 கூட்டுப்பெறுமதியான ஆராய்ச்சி மானியங்களைப் பெற்ற 12 விரிவுரையாளர்களுக்குரிய இறுதி ஆராய்ச்சி அறிக்கை வழங்கப்பட வேண்டிய திகதியை விஞ்சி ஒரு வருடம் கடந்திருந்த போதிலும் இறுதி ஆராய்ச்சி அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பல்வேறு காரணங்களின் அடிப்படையில் பல்கலைக்கழக சேவையிலிருந்து நீங்கியுள்ள 14 ஊழியர்களிடமிருந்து பெறவேண்டிய கடன் மீதி ரூபா 1,243,481 ஆக இருந்ததுடன் 5 முதல் 10 வருடங்களுக்கிடையே நீண்டகாலமாக கொண்டுவரப்படுகின்ற இந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 இனங்காணப்பட்ட நட்டம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பௌதீக புத்தகப் பரிசோதனைகள் படி ரூபா 3,292,524 பெறுமதியான 27,367 புத்தகங்கள் காணாமல் போயிருந்தது. இந்த புத்தகங்கள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் எந்தவித சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 362 வெற்றிடங்கள் காணப்படும் போது வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்காது ஒப்பந்த அடிப்படையில் 103 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 27,804,822 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. அனேகமான ஊழியர்களின் ஒப்பந்தக்காலம் 5 வருடங்களை விஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

# 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிதிக் கட்டுப்பாடு | காசோலைகளை இரத்துச் செய்தல், மீள விநியோகித்தல் மற்றும் வருமானத்திற்கு எடுத்தல் என்பன நலிவான நிலையில் காணப்பட்டமை. |
| (ஆ) ஒப்பந்த நிர்வாகம் | உரிய கோவைகள் முறையாக பராமரிக்கப்படாமை மற்றும் மேற்பார்வை நலிவான நிலையில் காணப்பட்டமை.<br><br>பிடிகாசு தொடர்பாக முறையான பதிவேடொன்று பேணப்பட்டிராமை. |
| (இ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | ஆதனங்களின் உரித்து உறுதிப்படுத்தப்படாமை, பராமரிப்பு மற்றும் கைதவிர்த்தல் தொடர்பான நலிவுகள் நிலையில் காணப்பட்டமை. |
| (ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | மீதியைத் தீர்த்துவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்காமை |
| (உ) பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்க்கும் நடைமுறை உரிய பிரகாரம் பின்பற்றப்படாமை, கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் வெளிச்செல்கை பதிவுசெய்யப்படாமை. |
| (ஊ) நூலக நிர்வாகம் | முறையான பிரகாரம் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளாமை, காணாமல் போதல் மற்றும் ஒப்பீட்டு ரீதியான பதிவேடுகள் முறையாகப் பேணப்படாமை. |